# இந்து சமயஅறநிலையத்துறை

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,

ஆதிதிருவரங்கம், சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

-----

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**டெண்டர் திறப்பு நாள் : 13-07-2022 பிற்பகல் 02.00 மணி**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ஆதிதிருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் கீழ்க்காணும் விபரப்படியான பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற முன் அனுபவம் பெற்ற, தகுதி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. முன் அனுபவச் சான்றும், மற்றும் முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது திருக்கோயில் இரசீது மற்றும் ஒப்பந்தபுள்ளி படிவம் ஆகியவைகளையும் வைத்து மூடி முத்திரையிட்டு 13.07.2022 பிற்பகல் 01.00 மணிவரை இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோவிலூர் நகர் (ம) வட்டம், கீழையூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 12.07.2022 மாலை 5.45 மணி வரை கீழையூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அதற்கான தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும், ஒப்பந்தபுள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in இணைய தளத்திலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளை 13.07.2022 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு ஆஜராகி இருக்கும் டெண்டர்தாரர்கள் மற்றும் இலாகா அலுவலர்கள் முன்னிலையில் திறந்து பதிவு செய்யப்படும்.

### வேலைவிபரங்கள்

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | டெண்டர் படிவம் (GST வரி 18%உட்பட) ரூ. | முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | இராஜகோபுரத்தில் இடிதாங்கி பொருத்தும் பணி | 219557/- | 2,500/- | 750 + 136 | 1 மாதம் | தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் |

### நிபந்தனைகள்

1) ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள் வேலைக்கான முன் வைப்புத்தொகையினை இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோவிலூர் நகர் (ம) வட்டம், கீழையூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்திய பின் தான் டெண்டர் படிவம் கொடுக்கப்படும்.
2) ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள், இரு பணிகளுக்கும் தனி தனி உறையில் அளிக்கப்பட வேண்டு. மேற்படி தொடர்பான பணியில் நன்கு அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

3) வேலைக்கான ஒப்பந்தபுள்ளியில் விலை விபரத்தினை இனம் வாரியாக எண்ணாலும் எழுத்தாலும் தனித்தனியே அடித்தல் திருத்தல் இன்றி குறிப்பிடவேண்டும். அவ்வாறு அடித்தல் திருத்தல் இருப்பின் சுருக்கொப்பம் இடப்படவேண்டும். குறைந்த தொகை குறிப்பிட்டுள்ள டெண்டரையே ஏற்றுக்கொள்ளப்படும். திருக்கோயில் நன்மையைக் கருதி, எந்த ஒரு டெண்டரையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அல்லது அங்கீகரிக்க இலாக்கா அலுவலருக்கு அதிகாரமுண்டு.
4) ஒப்பந்ததாரர் தளவாட சாமான்களை தமது பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தாரர் பயன்படுத்துபடும் பொருட்கள் ISI முத்திரை இட்ட பொருட்களே பயன்படுத்த வேண்டும்.
5) இராஜகோபுரத்தில் எவ்வித சேதாரம் ஏற்படா வண்ணம் வேலை செய்ய வேண்டும்.
6) அங்கீகரிக்கப்பட்ட டெண்டர்தாரர் வேலைக்கான உத்திரவு வழங்கப்பட்ட ஒரு வாரகாலத்திற்குள் தனது செலவில் ஒப்பந்தபத்திரம் எழுதி கொடுத்து, கூடுதல் வைப்புத்தொகையினை செலுத்தியும் குறித்த காலத்தில் வேலையை முடிக்கவேண்டும். ஒப்பந்த காலத்திற்குள் பணியை முடிக்கத் தவறினாலோ (அ) தாமதமாக செய்தாலும் ஒப்பந்தப்படி அபராதம் விதிக்கப்படும்.
7) ஒப்பந்த படிவம் கோரி விண்ணப்பிக்கும் போதே அவ்வேலைக்கான முன்வைப்பு தொகையையும் செலுத்த வேண்டும். டெண்டர் கிடைக்காத டெண்டர்தாரர்களின் முன்வைப்புத் தொகை டெண்டர் அங்கீகரிக்கப்பட்ட பின் வழங்கப்படும்.
8) செய்யப்பட்ட வேலைக்கு அவ்வப்போது இலாகா பொறியியல் துறையினர் அளவீடு செய்து சான்று செய்யப்படும் தொகையினையே வழங்கப்படும். அதன்படி வழங்கப்படும் தொகையில் GST 2 %, வருமானவரி 2 %, மற்றும் காப்பீடு தொகை 2 % வருங்கால பிடித்தத்திற்கோ அல்லது அதிகமாக பணம் பெற்றிருந்தால் ஈடு செய்வதற்கோ இறுதிப்பட்டியல் அங்கீகரிக்கப்படும் வரை வைத்து, பின்னரே திரும்ப அளிக்கப்படும்.
9) ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
10) வேலையின் போது தொழிலாளருக்கோ அல்லது பொருட்களுக்கோ நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு ஏற்கவேண்டும். இன்சூரன்ஸ் செய்து கொள்ள வேண்டும்.
11) இதர பிற நிபந்தனைகளை திருக்கோவிலூர் நகர் (ம) வட்டம், கீழையூர், அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திரு.க.சிவாகரன், எம்.ஏ.,
தக்கார்/உதவி ஆணையர்

இரா.அருள்
செயல் அலுவலர்

நாள் : 22.06.2022

இடம் : ஆதிதிருவரங்கம்.